செய்தி வெளியீடு எண் : 283 நாள்: 26.02.2022

# செய்தி வெளியீடு

## மாநில அளவில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்து செயல்படுத்துவது தொடர்பான கருத்தரங்கம் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், வேளாண்மையை வருமானம் ஈட்டக்கூடிய வகையில் தொழிலாக உயர்த்திட வேண்டியும், வேளாண்மைக்கென தனி நிதி நிலை அறிவித்தார்கள். வேளாண் நிதி நிலை அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றத்தில் சென்ற ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது.

வேளாண் நிதி நிலை அறிக்கையில் கிராமங்களின் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சி மற்றும் தன்னிறைவு பெறும் நோக்கில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் என்ற பெரும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தினை சிறப்பாக ஒருங்கிணைத்து செயல்படுத்தும் விதமாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்களுடன், வேளாண்மை–உழவர் நலத் துறையின் கீழ் செயல்படும் திட்டங்களை இணைத்துச் செயல்படுத்துவதற்கான, வழிமுறைகளை ஆராய்வதற்கான, மாநில அளவிலான ஒருங்கிணைப்பு கருத்தரங்கு இன்று 26.02.2022 தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகை கூட்ட அரங்கில், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஒருங்கிணைப்புக் கருத்தரங்கில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், வேளாண்மை–உழவர் நலத்துறை, துறைத் தலைவர்கள், தலைமைப் பொறியாளர்கள், வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், வேளாண்மை–உழவர் நலத்துறை அவர்கள் தமது உரையில், இரு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படும்போது கிராமங்கள் தன்னிறைவு அடைவதுடன் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியையும் அடையும் எனக் கூறினார்கள்.

முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள் தமது உரையில், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இவ்விரு துறைகளும் ஒன்றாக சேர்ந்திருந்ததையும், பின்னர் தனியாக செயல்பட்டு வருவது பற்றியும் நினைவு கூர்ந்தார்கள், தற்போது இவ்விரு துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் திட்ட பலன்கள் சீரிய முறையில் கிராம மக்களுக்கு விரைந்து சென்றடையும் என தெரிவித்தார்கள்.

தலைமைச் செயலாளர் அவர்கள் தமது தொடக்க உரையில், இரு துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் போது ஒட்டுமொத்த பலன்கள் கிடைக்கும் என்றும், திட்ட நோக்கங்கள் மக்களை சிறந்த முறையில் சென்றடையும் என்றும், வேளாண்மை–உழவர் நலத் துறையில் இல்லாத திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டங்களை கொண்டு ஒருங்கிணைத்து செயல்படுத்தி கிராமங்களில் முழுமையான வளர்ச்சியை அடைய வேண்டும் எனவும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தமது சிறப்புரையில், மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம், கிராமச் சாலைகள் திட்டம் மற்றும் இதர ஊரக வளர்ச்சி திட்டங்களை

ஒருங்கிணைப்பதன் மூலம் கிராம அளவில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட முடியும் என்று தெரிவித்தார்கள். கிராமப்புறத்தில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்கள் நகரங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு தரமான கிராம சாலைகள் அமைப்பதற்கு தமது துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளிக்கும் என தெரிவித்தார்கள்.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான மூன்று திட்டங்களில் ஒன்றான தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் திட்டத்தினை, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தையும் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் எய்த இயலும் என தெரிவித்தார்கள். மேலும், இரு துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சில ஆண்டுகளில் தமிழ்நாட்டின் அனைத்து கிராமங்களும் பசுமையாக விளங்கும் எனவும் தெரிவித்தார்கள்.

இக்கருத்தரங்கில் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து, திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை ஒருங்கிணைத்து செய்வதன் மூலம் விவசாயிகளின் வாழ்வில் ஒட்டுமொத்த ஏற்றம் கொண்டு வரத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்திடலாம் என மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமது முடிவுரையில் தெரிவித்துள்ளார்கள்.

இவ்விரு துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், வட்டார அளவிலான அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் இக்கருத்தரங்கினை காணொலி காட்சி வாயிலாக நேரலையாக காணுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**